1992 ஏப்ரல் 28]

பிற்பகல் 2-00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 35/1992) நிறைவேற்றப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு உணவகங்களிலும், தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 36/1992). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 36!1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி :

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1934 ஆம் ஆண்டு., அன்றைய தினம் சென்னை இராஜதானியின் முதலமைச்சராக இருந்த மூதறிஞர்

---

*27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

இராஜாஜி அவர்கள் முதன் முதலாக மதுவிலக்கை அமல்படுத்திய போது விற்பனை வரியை நாட்டுக்கு அறிமுகம் செய்தார். மது விலக்கினால் ஏற்பட்ட வரி இழப்பை ஈடு செய்கிற இந்த விற்பனை வரியை, சரியாகப் பெறவேண்டியர்களிடத்தில் பெற்றால் தான் ஏழைகளின் வாழ்வு உயர நலத் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்த முடியும். விற்பனை வரியைச் செலுத்தும் கெபாசிடி இருக்கின்றவர்கள்கூட வரி மோசடி செய்வது பரவலாக உள்ளது. வரி செலுத்தாமல் மோசடி செய்கின்றவர்கள் மீது கடுமையான வழக்குகள் போட்டு தனி நீதிமன்றங்களில் விசாரிக்க வேண்டும். ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட உணவு விடுதிகளுக்கு ஆடம்பர விற்பனை வரி விதிப்பதில் தவறு எதுவும் இல்லை. ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட உணவு விடுதிகளுக்கும், நட்சத்திர ஓட்டல்களுக்கும் வசதி படைத்தவர்கள் செல்லுகிறார்கள். வசதி படைத்தவர்களுக்கு வரி விதிப்பது நியாயமானதுதான். ஆனால், அதே சமயம் சாதாரண ஏழை மக்களும், நடுத்தர மக்களும் சாப்பிடுகின்ற உணவு விடுதிகளில் சாப்பிடுகின்றவர்கள் மீது விற்பனை வரி விதிப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். நடுத்தர ஓட்டல்களில் விற்பனை வரி விதிக்கின்றபோது பொதுமக்களிடமிருந்து வாங்கிய வரியைச் சரியாக அரசாங்கத்திற்குச் செலுத்துவதற்கான அளவுகோல் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுமக்களிடமிருந்து வாங்கப்படும் வரியை ஓட்டல் சொந்தக்காரர்கள் அரசாங்கத்திடம் செலுத்தாமல் தாங்களே வைத்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. சாப்பிட்டவர்கள் செலுத்திய வரியை பில் வாரியாகக் கணக்கிட்டு அதனை வாங்குகின்ற வாய்ப்பு நடைமுறை ரீதியாக விற்பனை வரி அதிகாரிகளுக்கு உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்குப் பதிலாக பஸ்களில் சீட்டுக்கு இவ்வளவு வரி என்று விதிப்பதைப் போலவும், சினிமா தியேட்டர்களில் 'கம்பவுண்டிங் டாக்ஸ்' விதிப்பதைப் போலவும் ஓட்டல்களுக்கு இவ்வளவு வரி விதிக்கலாம் என்ற முறையில் வரி விதிக்க அரசு முன்வரவேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, இந்த சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவங்களிலும் தங்கும் விடுதிகளிலும் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 36/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு, இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1992). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 37/1992)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. எஸ்.எஸ். ராம சுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு திருத்த) சட்டமுன்வடிவின் கீழ் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக, வேறு மாநிலங்களில் ஆவணங்களைப் பதிந்து வைப்பவர்கள் இங்கே நம்முடைய மாகாணத்தில் உள்ள முத்திரைத் தீர்வை அடிப் படையில் அவைகளை முறைப்படுத்தி அவைகளுக்கு முத்திரைத் தீர்வை அளிப்பதற்காக இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அதுமட்டுமல்லாமல் வெளி மாநிலங்களுக்குச் சென்று பதிவதைத் தடை செய்வதற்கும்தான் இது வந்திருக்கிறது. அந்த வகையில் வந்திருக்கின்ற இந்தத் திருத்தத்தை நான் வரவேற் கிறேன்.

---

* 27-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.